# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கைஎண்: 174 தேதி: 03.10.2014

## 03-10-2014 சர்வதேச நடவடிக்கை தினம்

(INTERNATIONAL DAY OF ACTION)

அன்பார்ந்த தோழர்களே, தோழியர்களே !

உலக தொழிற் சங்க சம்மேளனம் ( WORLD FEDERATION OF TRADE UNIONS ) ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 3 ஆம் தேதி சர்வதேச நடவடிக்கை தினமாக அனுஷ்டித்து வருகின்றது. உலகத்தொழிலாளர்கள் சந்தித்து வருகின்ற முக்கியமான பிரச்சினைகளை சர்வதேச தினம் அனுஷ்டிப்பதன் மூலமாக உலக மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்கின்றது. உலக தொழிற் சங்க சம்மேளன அமைப்பு 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ந் தேதி உருவானது. 03-10-2014 அதன் 70 ஆவது ஆண்டாகும். இந்த ஆண்டு அமைப்பு தினத்தை உலகமெங்கும் கடுமையாக பாதித்து வருகின்ற வேலையின்மை பிரச்சினையை உலக மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் சிறப்பாக அனுஷ்டிக்குமாறு WFTU அறைகூவல் விட்டுள்ளது.

உலக முழுவதும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம், உபரி என்று ஆட்குறைப்பு, ஆலை / நிறுவனம் மூடல் மூலமாக

வேலையிழப்பு என்று கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். புதிய நியமனங்களுக்குப் பதிலாக காண்ட்ராக்ட் முறை தீவிரமாக புகுத்தப்பட்டு வருகின்றது. ஆக வேலையின்மை பிரச்சினை இன்று கொடூராமாக உலகத் தொழிலார்களை தாக்கி வருகின்றது. எனவே இந்த பிரச்சினை உலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது WFTU அறைகூவல்.

நமது அகில இந்திய சங்கம் WFTU ல் இணைக்கப்பட்ட அமைப்பு. 03-10-2014 சர்வதேச நடவடிக்கை தினத்தை நாமும் சிறப்பாக அனுஷ்டிக்க வேண்டும் என்று நமது அகில இந்திய சங்கமும் அறைகூவல் விட்டுள்ளது. எனவே தமிழகத்தில் உள்ள நமது மாவட்டச் சங்கங்கள் 03-10-2014 முதல் ஒரு வார காலத்திற்குள் சிறப்புக் கூட்டங்கள் தனியாகவோ அல்லது பிற பகுதி உழைக்கும் மக்களுடன் இணைந்தோ நடத்தி **சர்வதேச நடவடிக்கை தினத்தை** சிறப்பாக அனுஷ்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

உலக தொழிலாளர் இயக்கத்தில் நம்மை இணத்துக் கொள்வோம்

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(S.செல்லப்பா)
மாநில செயலாளர்.